# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, FAST TRACK COURT, ARANI.

## S.C.No.125/2018

**Deposition of Witness for : P.W.16**

| | | |
|---|---|---|
| **Name** | : | திரு. இளவரசன் |
| **Father's Name** | : | திரு. |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**எதிரிகள் 2, 4 முதல் 6 ஆஜர். 3வது எதிரி இறந்துவிட்டார். மற்ற எதிரிகளுக்கு மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 11.08.2025.**

**முதல் விசாரணை -**

நான் தற்போது கள்ளக்குறிச்சி மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். நான் ஏற்கனவே 09.08.2011 அன்று தெள்ளார் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக

பணியிலிருந்து போது, தெள்ளார் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவர் தெள்ளார் காவல் நிலைய குற்ற எண்.204/2011, சட்டப்பிரிவுகள் 147, 324 மற்றும் 323 இ.த.ச வின் கீழ் 01.08.2011 அன்று வழக்கு பதிவு செய்து முதல் விசாரணை முடித்து வைத்திருந்த வழக்கில், சாட்சி கண்ணன் என்பவர் 09.08.2011 அன்று காலை 10.00 மணிக்கு சென்னை அரசு பொது மருத்துவமனையில் இறந்துவிட்டதாக எனக்கு மதியம் கிடைக்கப் பெற்ற மருத்துவ தகவலின் படி, சாட்சி செல்வராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த மறுவாக்குமூலத்தை பதிவு செய்து, மேற்படி சட்டப்பிரவுகளை 147, 148, 341, 447, 324, 323 மற்றும் 302 இ.த.ச.வின் கீழ் சட்டப்பிரிவு மாற்றம் செய்து துரித பிரிவு மாற்ற அறிக்கை தயார் செய்தும் கனம் நீதித்துறை நடுவர், வந்தவாசி அவர்களுக்கும் மற்ற நகல்களை காவல் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிக் கொண்டேன். அந்த துரித பிரிவு மாற்ற அறிக்கை **அ.த.சா.ஆ.22**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

மறுநாள் 10.08.2011 அன்று இறந்த கண்ணனின் பிரேதம் சென்னை அரசு பொது மருத்துவமனை சவக்கிடங்கில் இருந்ததால், காலை 8.00 மணிக்கு அங்கு சென்று காலை 08.00 மணி முதல் காலை 11.00 மணி வரை இறந்த கண்ணனின் உறவினர்கள் பிரேதத்தை அடையாளம் காட்ட பிரேதத்தின் மீதான விசாரணையை பஞ்சாயத்தார்கள் தேவராஜன், மாயகிருஷ்ணன், செல்லப்பிள்ளை, மணிகண்டன் மற்றும் ஆறுமுகம் ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ.23**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

பின்பு சாட்சிகள் செல்வராஜீ, குமாரி, லட்சுமிதேவி, மகாலிங்கம் ஆகியோர்களை விசாரணை செய்து மறு வாக்குமூலங்கள் பதிவு செய்துக் கொண்டேன். சாட்சி முருகன் என்பவரையும் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துக் கொண்டேன். என்னுடைய பிரேத விசாரணையை முடித்து பிரேதத்தை தெள்ளார் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பிரசன்னமாதவன் என்பவரிடம் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக மருத்துவரிடம் அடையாளம் காட்ட ஒப்புவித்தும், பிரேததத்தில் உடல் உள்ளுறுப்புகள், Control Blood ஆகியவற்றை சேகரிக்க அறிவுறுத்தியும் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பிக் கொண்டேன்.

பிரேதத்தின் மீதான இரத்தக் கறை படிந்த வேட்டி மற்றும் சட்டை ஆகியவற்றை சேகரிக்கவும் மேற்படி தெள்ளார் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பிரசன்னமாதவன் என்பருக்கு அறிவுரை வழங்கிக் கொண்டேன். பின்பு அன்றைய தினமே சம்பவ இடமான அறுங்குணம் கிராம சாட்சி திரு. செல்வராஜ் என்பவரின் நிலத்தில் சாட்சிகள் மாய கிருஷ்ணன், வினோத் ஆகியோர் முன்னிலையில் சாட்சி செல்வராஜ் சம்பவ இடத்தை அடையாளம் காட்ட சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை தயார் செய்தேன். மேற்படி பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன்.

தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் மாதிரி வரைபடம் நான் தயார் செய்த மாதிரி வரைபடம் தான். அது **அ.த.சா.ஆ.24**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. இதனை தொடர்ந்து அதே சாட்சிகளான மாய கிருஷ்ணன்,

வினோத் ஆகியோர் முன்னிலையில் மாலை 4.30 மணிக்கு சம்பவத்திற்கு எதிரிகளால் பயன்படுத்தப்பட்ட கொம்புகளை சாட்சி செல்வராஜ் என்பவர் அடையாளம் காட்ட 6 எண்ணிக்கையுள்ள கொம்புகளை கைப்பற்றுதல் மசரில் கைப்பற்றியும், மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், பின்பு மேற்படி சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துக் கொண்டேன்.

மேற்படி வழக்குச் சொத்தான 6 எண்ணிக்கையுள்ள கொம்புகளை படிவம் 95 மூலம் கனம் வந்தவாசி நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பிக் கொண்டேன். அந்த படிவம் 95 **<u>அ.த.சா.ஆ.25</u>**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவர் தனது விசாரணையில், எதிரி ஏழுமலை என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியும், நீதிமன்றத்தில் அன்றைய தினமே அவர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளார். மற்ற எதிரிகள், மேற்படி அதே நீதிமன்றத்தில் சரண் அடைந்து ஜாமீனில் சென்றுள்ளார்கள்.

இது கொலை வழக்காக மாறியதால், மேற்படி ஜாமீன்களை ரத்து செய்யக் கோரி கனம் வந்தவாசி நீதித்துறை நடுவர் அவர்களுக்கு 11.08.2011 அன்று வேண்டுகோள் கடிதம் கொடுத்துக் கொண்டேன். இதனடிப்படையில், நீதித்துறை நடுவர், வந்தவாசி அவர்கள் 12.08.2011 அன்று எதிரிகளை ஆஜர் செய்ய கொடுத்த அறிவிப்புகளை பெற்றும், 11.08.2011 அன்றே எதிரிகளின் வீடுகளுக்கு மேற்படி அறிவிப்புகளை சார்வு செய்ய காவலர்களை அனுப்பியும், எதிரிகள் தலைமறைவாக இருந்ததால் மறுநாள் 12.08.2011 அன்று கிராம நிர்வாக அலுவலர்கள் திரு. சுரேஷ் மற்றும் ராதாமணி மற்றும் கிராம உதவியாளர்கள் திரு. மைக்கேல் ராஜ் மற்றும் திரு. மாரிமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் மேற்படி எதிரிகளின் வீட்டில், ஒட்டு சார்வு செய்யப்பட்டது.

அதன் நகல்களை அன்றைய தினமே கனம் நீதித்துறை நடுவர், வந்தவாசி அவர்களிடம் ஒப்புவித்தும், Non Bailable Warrant மேற்படி எதிரிகளுக்கு பெற்றும், 13.08.2011 அன்று காலை 10.00 மணிக்கு மாவளவாடி கிராம கூட்ரோட்டில் காவலர் பார்ட்டி சகிதம் எதிரிகள் கிருஷ்ணன், மாரிமுத்து, சீத்தாராமன், ஏழுமலை ஆகியோர்களை கைது செய்தும் கனம் நீதித்துறை நடுவர், வந்தவாசி அவர்களிடம் ஆஜர் செய்தும், நீதிமன்ற காவல் பெற்றும், வேலூர் மத்திய சிறையில் மேற்படி எதிரிகள் அடைக்கப்பட்டனர். பின்பு மேற்படி எதிரிகளை போலீஸ் கஸ்டடி எடுக்க கனம் நீதித்துறை நடுவர், வந்தவாசி அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தும் எதிரிகள் ஆஜர் செய்யப்பட்டும், நான் சத்திய பிரமாண வாக்குமூலம் கொடுத்தும், கஸ்டடி கேட்டும், கனம் நீதித்துறை நடுவர், வந்தவாசி அவர்கள் எதிரிகளிடம் கஸ்டடி செல்ல ஏதாவது ஆட்சேபனை உண்டா என வினாவும், மேற்படி எதிரிகள் ஆட்சேபனை ஏதும் இல்லை என்று சொன்ன பிறகு, மேற்படி கஸ்டடி பெட்டிசனை டிஸ்மிஸ் செய்தும் உத்தரவு பிறப்பித்தார்.

மேற்படி உத்தரவினை பெற்றும், மறுநாள் கனம் திருவண்ணாமலை முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களிடம் சீராய்வு மனு கொடுத்தும், 25.08.2011 அன்று எதிரிகளை ஆஜர் செய்ய உத்தரவிட்டார். அன்று 25.08.2011 மேற்படி எதிரிகள் ஆஜர் செய்யப்பட்டனர். அன்று திருவண்ணாமலை முதன்மை மாவட்ட நீதிபதி அவர்கள் விடுப்பில் இருந்ததால், கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் (Chief Judicial Magistrate, Tiruvannamalai) அவர்களிடம் ஆஜர் செய்யப்பட்டும், 26.08.2011 அன்றைய தேதிக்கு வாய்தா போடப்பட்டது. அன்றைய தேதியில் 26.08.2011 மேற்படி எதிரிகள் கனம் திருவண்ணாமலை

முதன்மை மாவட்ட நீதிபதி அவர்கள் முன்பு ஆஜர் செய்யப்பட்டு, சத்திய பிரமாணம் என்னால் கொடுக்கப்பட்டும், 2 நாட்கள் கஸ்டடி 27.08.2011 மற்றும் 28.08.2011 ஆகிய தேதிகளுக்கு உத்தரவு வழங்கப்பட்டது.

மேற்படி உத்தரவினை வேலூர் மத்திய சிறைக்கு ஒப்புவித்தும், மறுநாள் மதியம் எதிரிகளை மத்திய சிறையிலிருந்து பெற்றும், மாலை 5.30 மணிக்கு சிறை வாசிகளுடன் நிலையம் சேர்ந்தேன். சிறைவாசி திரு. கிருஷ்ணன் என்பவரை விசாரணை செய்ய எவ்வித அச்சுறுத்தலும், ஆசை வார்த்தைகளுமின்றி சாட்சிகள் அறுங்குணம் கிராம நிர்வாக அலுவலர் திரு. ராதாமணி, கிராம உதவியாளர் திரு. கந்தசாமி ஆகியோர் முன்னிலையில் மேற்படி எதிரி கிருஷ்ணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், கொலைக்கு பயன்படுத்திய இரத்தக் கறை படிந்த மர கைப்பிடி போட்ட இரும்பு கத்தியை கொண்டையாங்குப்ப கிராம மெயின் ரோட்டில் அறுங்குணத்தில் தனது அண்ணன் மாரிமுத்து என்பவரின் பண ஓலையினால் கட்டப்பட்ட வயல் வேய்ந்த வீட்டின் முன் தாழ்வாரத்தில் மறைத்து வைத்திருப்பதாகவும், தன்னை அழைத்துச் சென்றால் மேற்படி கத்தியை எடுத்து சாட்சிகள் முன்னிலையில் என்னிடம் ஆஜர் செய்வதாக சொன்னார். எதிரி கிருஷ்ணன் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.26**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

பின்பு மேற்படி சாட்சிகள் முன்னிலையில் சிறைவாசி மாரிமுத்து 27.08.2011 அன்று மாலை 7.00 மணிக்கு எவ்வித அச்சுறுத்தலும், ஆசை வார்த்தைகளுமின்றி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், கொலைக்கு பயன்படுத்தப்பட்ட ரத்தக் கறை படிந்த துவாரமுள்ள இரும்பு பைப் ஒன்றை தனது வீட்டின் எரவாணத்தில் சொருகி மறைத்து வைத்திருப்பதாகவும்,

தன்னை அழைத்துச் சென்றால் மேற்படி சாட்சிகளான அறுங்குணம் கிராம நிர்வாக அலுவலர் திரு. ராதாமணி, கிராம உதவியாளர் திரு. கந்தசாமி ஆகியோர் முன்னிலையில் எடுத்து ஆஜர் செய்வதாகவும் மேற்படி எதிரி மாரிமுத்து தன்னுடைய ஒப்புதல் வாக்குமூலத்தில் சொன்னார். எதிரி மாரிமுத்து என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.27**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

மறுநாள் 28.08.2011 அன்று மேற்படி அதே சாட்சிகளுடன் சிறைவாசி கிருஷ்ணன் மற்றும் மாரிமுத்து ஆகியோரை அறுங்குணம் கிராமத்திற்கு அழைத்துச் சென்றும், கிருஷ்ணன் தனது அண்ணன் மாரிமுத்து என்பவரின் வீட்டின் எரவாணத்தில் சொருகி வைத்திருந்த மேற்படி கத்தியை அதே சாட்சிகளான அறுங்குணம் கிராம நிர்வாக அலுவலர் திரு. ராதாமணி, கிராம உதவியாளர் திரு. கந்தசாமி ஆகியோர் முன்னிலையில் என்னிடம் ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகசர் மூலம் காலை 7.00 மணிக்கு கைப்பற்றியும் மேற்படி சாட்சிகளிடம் கைப்பற்றுதல் மசரில் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.28-**ஆக குறியீடுச் செய்யப்படுகிறது.

பின்பு காலை 8.00 மணிக்கு மேற்படி அதே சாட்சிகளான அறுங்குணம் கிராம நிர்வாக அலுவலர் திரு. ராதாமணி, கிராம உதவியாளர் திரு. கந்தசாமி ஆகியோர் முன்னிலையில் சிறைவாசி மாரிமுத்து தனது வீட்டின் எரவாணத்தில் சொருகி மறைத்து வைத்திருந்த இரத்தக் கறை படிந்த துவாரமுள்ள இரும்பு பைப்பை எடுத்து என்னிடம் ஆஜர் செய்ததை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியும், மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.த.சா.ஆ.29-** ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்பு சாட்சிகள் அறுங்குணம் கிராம நிர்வாக

அலுவலர் திரு. ராதாமணி, கிராம உதவியாளர் திரு. கந்தசாமி, தமிழ்மணி ஆகியோர்களை விசாரணை செய்தும் வாக்குமூலங்கள் பதிவு செய்துக் கொண்டேன். பின்பு சிறைவாசிகளுடன் நிலையம் சேர்ந்தேன்.

மேற்படி வழக்குச் சொத்துக்களை இரண்டு படிவம் 95 மூலம் கனம் வந்தவாசி நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பிக் கொண்டேன். மேற்படி இரண்டு படிவம் 95 ஒன்று **அ.த.சா.ஆ.30** (கத்தி) மற்றொரு படிவம் 95 (இரும்பு பைப்) **அ.த.சா.ஆ.31**-ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்பு, சிறைவாசிகளை கனம் திருவண்ணாமலை முதன்மை மாவட்ட நீதிபதி, அவர்கள் முன்பு ஆஜர் செய்தும், உத்தரவு பெற்றும், வேலூர் மத்திய சிறைக்கு அனுப்பிக் கொண்டேன். பின்பு பிரேதத்திலிருந்து கைப்பற்றப்பட்ட உடல் உள்ளுறுப்புகள், Control Blood ஆகியவை வேண்டுகோள் கடிதம் மூலம் சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு பகுப்பாய்வு செய்ய கனம் நீதித்துறை நடுவர், வந்தவாசி அவர்களுக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பிரசன்னமாதவன் என்பவர் மூலம் அனுப்பப்பட்டது. பிரேத்தின் மீதிருந்து எடுக்கப்பட்ட இரத்தக் கறை படிந்த வேட்டி, சட்டை ஆகியவற்றை தனி அறிக்கையின் மூலம் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பிரசன்னமாதவன் என்பவர் எடுத்து என்னிடம் ஆஜர் செய்ததை சென்னை தடய அறிவியில் ஆய்வகத்திற்கு பகுப்பாய்வு செய்ய வேண்டுகோள் கடிதம் மூலம் கனம் நீதித்துறை நடுவர், வந்தவாசி அவர்களுக்கு அனுப்பிக் கொண்டேன்.

மேற்படி அறிக்கைகளை பெற முன்னுரிமை அடிப்படையில், பெற்றுத் தர கனம் நீதித்துறை நடுவர், வந்தவாசி அவர்களுக்கும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பிரசன்னமாதவன் மூலம் மீண்டும் வேண்டுகோள் கடிதம் கொடுத்துக் கொண்டேன். பின்பு 10.10.2011 அன்று சாட்சிகள் அறுங்குண கிராம நிர்வாக

அலுவலர் திரு. வெற்றிவேல், சம்பவ இடத்தில் அக்கம் பக்கம் உள்ள சாட்சிகள் செல்வராஜ், நாராயணசாமி, சுப்பிரமணி, குமார் ஆகியோர்களையும் விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துக் கொண்டேன்.

27.08.2011 அன்று சிறைவாசிகள் ஏழுமலை, சீத்தாராமன் (எ) முத்துராமன் ஆகியோர்களுக்கும் ஒப்புதல் வாக்குமூலங்கள் பதிவு செய்துக் கொண்டேன்.

**(முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional Sessions Judge,
Arani.